**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு(WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**A041 இலக்கிய வரலாறு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. அரிஸ்டாட்டிலின் கவிதை இயலுடன் ஒப்பிடலாம் எனக் கூறப்படும் தமிழ் நூல் எது?
2. குறுந்தொகையைத் தொகுத்தவர் யார்?
3. ஏறுதழுவிப் பெண்ணை மணத்தல் குறித்து கூறும் சங்க இலக்கிய நூல் எது?
4. அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார் – கூறும் நூல் எது?
5. திருச்சிற்றம்பலக் கோவை – இயற்றியவர் யார்?
6. தமிழில் விருத்தப்பாவால் எழுதப்பட்ட முதல் காப்பியம் எது?
7. பள்ளிச் சந்தம் என்றால் என்ன?
8. பிங்கல நிகண்டினைச் செய்தவர் யார்?
9. திருக்கைலாய ஞான உலாவின் ஆசிரியர் யார்?
10. நளவெண்பாவில் உள்ள காண்டங்கள் எத்தனை? அவை யாவை?
11. மணமாகாது துறவு பூண்ட பெண்மணியைச் சமணம் எவ்வாறு குறிப்பிடுகிறது?
12. சோழர் கால அவ்வையார் பாடிய நூல்கள் யாவை?
13. இராமலிங்க அடிகளாரின் நூல்களைத் திருமுறைகளாகத் தொகுத்துப் பதிப்பித்தவர் யார்?
14. யாழ் நூலின் ஆசிரியர் யார்?
15. பேரறிஞர் அண்ணாவின் புதினங்களில் இரண்டினைக் கூறுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. தமிழ் மொழியின் தொன்மை குறித்துக் கூறுக
2. புறநானூறு – குறிப்பு வரைக.
3. நம்மாழ்வாரின் படைப்புகளைக் கூறுக.
4. மணக்குடவரின் திருக்குறள் உரை குறித்து இயம்புக.
5. யாப்பருங்கலக்காரிகை –குறிப்பு வரைக.
6. நிகண்டுகளின் தோற்றம் குறித்து இயம்புக.
7. சீறாப்புராணம் குறிப்பு வரைக.
8. தமிழில் தந்தை பெரியார் செய்த எழுத்து சீர்திருத்தம் குறித்து இயம்புக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில்விடை தருக. (3x15=45)**

1. (அ) சங்கம் இருந்ததற்கான சான்றுகளை எடுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) சைவ இலக்கியங்கள் குறித்து ஒரு கட்டுரை வரைக.

2. (அ) பத்துப்பாட்டு நூல்கள் குறித்துத் தொகுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) சித்தர் பாடல்களின் தனித்தன்மைகளை எடுத்துரைக்க.

3. (அ) இருபதாம் நூற்றாண்டு கவிதைகளில் திராவிட இயக்கக் கொள்கைகளின் தாக்கங்களைப் புலப்படுத்துக

   (அல்லது)

   (ஆ) கிறித்துவர்கள் தமிழுக்கு ஆற்றிய பணிகளை எடுத்துரைக்க.

***